**News:** A flood relief programme was organized by our institution

**Newspaper:The Hindu tamil Published:5/2/16**



# இந்த நாயகர்களின் கனவு நிறைவேறுமா?

பால்நிலவன்

**எங்கிருந்து வந்தார்கள்? என்ன செய்தார்கள்?**

வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட இளைஞர்கள் கவுரவிக்கப்பட்டபோது...




otto SHIRTS TROUSERS JEANS T-SHIRTS
Sairam INSTITUTIONS
CSB THE CHENNAI SCHOOL OF BANKING

தி இந்து • வெள்ளி, பிப்ரவரி 5, 2016




என்.டி.டி.வி. விருது பெறும் சிறுவர்கள்

முதல் கடைசி நாள் வரை தங்களால் இயன்றதைச் செய்தார்கள், சக தன்னார்வலர்களால் 'காக்கா முட்டை'கள் என்றழைக்கப்பட்ட இந்த வாண்டுகள். இவர்களின் சேவையும் 'தி இந்து'வில் பதிவானது. இவர்களைப் போன்று வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தன்னார்வலர்களுக்குக் கடந்த 1ம் தேதி 'தி இந்து' பாராட்டு விழா நடத்தியது. இந்த விழாவுக்கு 'ஓட்டோ' ஆடையகம், சாய்ராம் கல்விக் குழுமம் மற்றும் சென்னை ஸ்கூல் ஆ·ஃப் பேங்கிங் ஆகிய நிறுவனங்கள் உறுதுணையாக இருந்தன.

## முதல் ப்ளேன் பயணம்!

என்.டி.டி.வி. விருது பற்றிய அறிவிப்பு கிடைத்ததும் ஓர் இளைஞர் 'நான் இவர்களை டெல்லிக்கு அழைத்துச் செல்கிறேன்' என பொறுப்பேற்க முன்வந்தார். அவர் வசந்த். ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் மனித வள அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டிருப்பவர் இவர். நிவாரண முகாம் பணிகளில் வந்து தன்னை இணைத்துக்கொண்டு தொடர்ந்து உதவிப் பணிகளை ஈடுபாட்டோடு செய்துவந்தவர்.

களப் பணியாற்றிய தன்னார்வலர்களுக்கு சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மேடையேறிய சிறுவர்களுக்குத் தேவையான உடனடி பொருட்களை வசந்த் வாங்கித் தந்தார். பெற்றோர்களிடம் பேசி, அன்றிரவு தன் வீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்று தன் பிள்ளைகளோடு அவர்களையும் தங்கவைத்தார்.

தன்னுடைய பல்வேறு அலுவலகப் பணி நெருக்கடிகளுக்கு இடையில் இரண்டு நாள் விடுப்பு எடுத்துக்கொண்ட வசந்த் விருதுபெறும் சிறுவர்களுக்குத் துணையாக மறுநாள் டெல்லிக்குச் சென்றார்.

கூவம் கால்வாய் அருகே ரயில்வே பாலத்தின்கீழே எந்தவிதப் பாதுகாப்பும் வசதியுமின்றி இருந்த இவர்களை அடிக்கடி அழைத்து தேவையானதை வழங்கி



ஊக்குவித்து உறுதுணை புரிந்தவர், திருவல்லிக்கேணி சரக காவல் உதவி ஆணையாளர் பீர்முகம்மது. இவரிடம் வாழ்த்துகளைப் பெற்று மூவரும் டெல்லிக்குப் புறப்பட்டனர்.

இதுநாள் வரை வானில் விமானம் பறப்பதை மட்டுமே பார்த்து வந்த இந்தச் சிறுவர்களின் முதல் விமானப் பயணம் இது! விருது பெற்றுத் திரும்பிய சிறுவர்கள் 'தி இந்து' அலுவலகத்துக்கும் அழைத்து வரப்பட்டு உபசரிக்கப்பட்டனர்.

## இளவரசர்கள் உதிர்த்த முத்துகள்

"டெல்லிக்கு ப்ளேன்ல போயிட்டு வந்தது நல்லா இருந்துச்சு. அந்த ·ஃபங்ஷன்ல யார் யாரோ பெரிய பெரிய வி.ஐ.பி.லாம் இருந்தாங்க. நாங்க ஜாலியா சித்தார்த் அண்ணா கூட அரட்டை அடிச்சோம். கேம்ப்ல ரொம்ப ஜாலியா வேலை செஞ்சோம். எங்களுக்கு இவ்ளோ பெரிய அவார்டு கிடைச்சிருக்கு. நல்லா படிக்கணும். இன்னும் நிறைய பேருக்கு உதவி செய்யணும்னு தோணுது" என்று அடுக்கியவர்களைப் பாராட்ட கைகுலுக்கியபோது அந்தப் பிஞ்சுக் கரங்களின் உள்ளங்கை வியர்வை ஈரம் இதமாக இருந்தது.

'நல்லாப் படிக்கணும்!' என்பதுதான் இப்போதைக்கு இவர்களின் ஒரே கனவு. அந்தக் கனவு நிறைவேறுமா?